# பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

1. கௌதாரி இரை தேடிப் பறந்துச்சு.

    கௌதாரி இரை தேடிப் பறந்தது.

2. நெல் வயல்ல அறுவடக்காலம் முடிஞ்சிருச்சு.

    நெல் வயலில் அறுவடைக்காலம் முடிந்துவிட்டது.

3. அது ரொம்ப வயசான கொக்கு.

    அது மிகவும் வயதான கொக்கு.

4. சிங்கத்தப் பாத்து எலி பயந்துச்சு.

    சிங்கத்தைப் பார்த்து எலி பயந்தது.

5. குதுர வேமா ஓடும்.

    குதிரை வேகமாக ஓடும்.

6. செடியில பூ பூத்துச்சு.

    செடியில் பூ பூத்தது.

7. யான தண்ணி குடிக்க குளத்துக்கு வந்துச்சு.

    யானை தண்ணீர் குடிக்க குளத்துக்கு வந்தது.

8. இன்னைக்கு பள்ளிக்குடம் இல்ல.

    இன்றைக்கு பள்ளிக்கூடம் இல்லை.

9. அவரு உப்பு வியாபாரம் பாக்குறாரு.

    அவர் உப்பு வியாபாரம் பார்க்கிறார்.

10. மருத்துவரு அவள பரிசோதிச்சிப் பாத்தாரு.

    மருத்துவர் அவளை பரிசோதித்துப் பார்த்தார்.